சார்பு நீதிமன்றம், சங்ககிரி

முன்னிலை: திரு.ந.பன்னீர்செல்வம், B.A., B.L.,
சார்பு நீதிபதி, சங்ககிரி

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், மாசித்திங்கள் 14 ம் நாள் திங்கட்கிழமை

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண்.57/2020
CNR No: TNSA07-0001362020

1. மைனர் பிரீத்திகாஸ்ரீ
2. மைனர் விசாகன்

மைனர்களுக்காக அவர்களின் பாதுகாவலர் மற்றும் தாயார் ஜோதி

..வாதிகள்

/எதிராக/

1. கணேசன்
2. சுரேஷ் கணேசன்
3. சங்கர்

..பிரதிவாதிகள்

இவ்வழக்கு இன்று 07.02.2024 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.செல்வராஜா அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளை அழைத்தும் முன்னிலையாகாததால் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களையும், சாட்சியத்தையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இத்தாவா வாதிகளால் தாவா சொத்துக்களை 9 சம பாகங்களாக பிரித்து அதில் இரண்டு பங்கை வாதிகளுக்கு ஒதுக்கி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககோரியும், பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, முகவர்களோ தாவா சொத்துக்களில் உள்ள வாதிகளின் பங்கையும் சேர்த்தோ, செக்குபந்திகண்டோ எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவு தொகையும் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:

தாவா சொத்என்பதையும் வாதிகள் மெய்பித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. துக்கள் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பூர்வீக சொத்துக்கள். தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் 13.06.2005 ம் தேதியில் மற்ற கூட்டுப்பங்குதாரரோடு பாகப்பிரிவினை செய்து கொண்டதாகவும், மேற்படி பாகப்பிரிவினையின்போது பிரதிவாதிகளுக்கு கூட்டாக A

செட்யூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதிக்கும், வாதிகளின் தாயார் ஜோதி என்பவருக்கும் 04.06.2003ம் தேதியில் ஈரோடு திண்டல் முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்தின் பயனாக 2ம் பிரதிவாதி மற்றும் ஜோதி என்பவருக்கு 1ம் வாதியும், 2ம் வாதியும் பிறந்துள்ளனர். 2ம் பிரதிவாதியின் வேலையின் காரணமாக 2ம் பிரதிவாதியும், அவரது மனைவி ஜோதி மற்றும் வாதிகள் பல்வேறு மாநிலங்களில் வசித்து வந்துள்ளனர். மேற்படி திருமணத்தின்போது வாதிகளின் தாயார் ஜோதி என்பவரின் பெற்றோர் வரதட்சணையாக கொடுத்த நகை மற்றும் பணம் ஆகியவற்றை 2ம் பிரதிவாதி தான்தோன்றிதனமாக வேலைக்கு செல்லாமல் செலவு செய்துள்ளார். 1ம் வாதி பூப்பு எய்தியபோது வாதிகளின் தாயார் ஜோதி என்பவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் விழாவிற்கு சென்றபோது 2ம் பிரதிவாதி தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியுள்ளார். மேலும் வாதிகளையும், வாதிகளின் தாயாரையும் 2ம் பிரதிவாதி வீட்டைவிட்டு வெளியே அனுப்பியதால் அவர்கள் ஈரோட்டில் வசித்து வந்துள்ளார்கள். 2ம் பிரதிவாதி கடந்த 03.03.2019ம் தேதி அன்று பிரியங்கா என்ற பெண்ணை 2ம் திருமணம் செய்தது தெரிந்த பின்பு வாதிகளின் தாயார், 2ம் பிரதிவாதி மற்றும் அவரது 2வது மனைவி மற்றும் மற்றவர்கள் மீது ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் தனி நபர் குற்றமுறையீடு புகார் கொடுத்து அந்த புகார் C.C.No.1151/2019 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்துக்களில் எவ்வித பாகப்பிரிவினையும் செய்யாமல் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால், பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பங்கு பாத்தியப்பட்டது. 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கு வாதிகளுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் சமமாக பாத்தியப்பட்டது.

2. தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/9 பங்கு பாத்தியப்பட்டது. இந்நிலையில் 2ம் பிரதிவாதி, இரண்டாவது திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வருவதால் வாதிகளின் பங்கை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் தாவா சொத்துக்களைப் பொருத்து வில்லங்க விவகாரங்களை ஏற்படுத்தி வருவதாக வாதிகளின் தாயாருக்கு தெரியவந்துள்ளது. வாதிகளின் தாயார் வாதிகளின் பங்கை பிரித்துக்கொடுக்கும்படி உறவினர்கள் மூலம் கேட்கும்போதெல்லாம் பிரதிவாதிகள் தேவையற்ற காரணங்களைக் கூறி காலம் தாழ்த்தி வருகிறார்கள். அதனால் வாதிகளின் தாயார் 20.01.2020ம் தேதி அன்று தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பங்கினை சட்டப்படியாக பிரித்து முறையான பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி பதிவு செய்து கொடுக்குமாறு பிரதிவாதிகளை கேட்டபோது பிரதிவாதிகள் மறுத்துள்ளார்கள். எனவே வாதிகளால் பாகப்பிரிவினை, தனிசுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவு தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் அவர் இவ்வழக்கினைப் பொறுத்தவரையில் தோன்றாதரப்பினர்களாக உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

4. <u>பிரச்சனை:</u>

இவ்வழக்கில் வாதிகள் கோரியபடி தீர்ப்பளிக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பதுதான் இதில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. இத்தாவாவில் வாதிகள் தரப்பில் வாதிகளின் தாயார் ஜோதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இத்தாவாவில் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை மெய்ப்பிக்கும் பொருட்டு வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதிகளின் தாயார் ஜோதி என்பவர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை சங்கதிகளை ஒட்டி சாட்சியம் அளித்துள்ளார். மேலும், 13.06.2005 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் நகல் வா.சா.ஆ.1 ஆகவுஎன்பதையும் வாதிகள் மெய்ப்பித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. ம், 04.04.2004 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 02.02.2012 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், தாவா சொத்திற்காக கணேசன் பெயரிலுள்ள பட்டா மற்றும் 'அ' பதிவேடு நகல் வா.சா.ஆ.4 ஆகவும், ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் C.C.1151/2019 – வழக்கு அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வாதிகள் தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை மறுத்துரைக்கும் விதமாக குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் முன்வராமல் தோன்றாத்தரப்பினர்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே, வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் பார்க்கும்பொழுது தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் கூட்டுப்பங்குதாரரோடு பாகப்பிரிவினை செய்துள்ளதும், மேற்படி பாகப்பிரிவினையில் பிரதிவாதிகளுக்கு A செட்யூல் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளதும், மேற்படி A செட்யூல் சொத்துக்களை பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்பதும், 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதிகளுக்கும் சரிசமமாக பங்கு உள்ளது என்பதையும் வாதிகள் மெய்ப்பித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, வாதிகள் தன்மீதுள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்த்துள்ளதால், அவர்கள் இத்தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதுதான் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

7. <u>தீர்வு:-</u>

இறுதியாக, பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை நலம்திகடு கலந்து 9 சமபாகங்களாக பிரித்து அதில் 2 பாகத்தை வாதிகளுக்கு 2 மாதக்காலங்களுக்குள் ஒதுக்கி கொடுக்க வேண்டும் என்றும், தவறினால் வாதிகள் இந்நீதிமன்றத்தில் தனியாக இறுதி நிலை தீர்ப்பாணை கேட்டு மனு தாக்கல் செய்து 2/9 பாகத்தை பிரித்து தனிச்சுவாதீனம் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கியும், பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, முகவர்களோ தாவா சொத்துக்களில் எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவு தொகையை வாதிகளுக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

N PANNEERSELVAM
Digitally signed by N PANNEERSELVAM
Date: 2024.02.26 18:45:17 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.

<u>வாதி தரப்பு சாட்சிப்பட்டியல்:</u>

வா.சா.1 .. திருமதி. ஜோதி

<u>வாதி தரப்பு சான்றாவணப்பட்டியல்:</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.06.2005 | பாகப்பிரிவினை பத்திரம் | /நகல்/ |
| வா.சா.ஆ.2 | 04.04.2004 | 1 ம் பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழ் | /நகல்/ |
| வா.சா.ஆ.3 | 02.02.2012 | 2 ம் பிரதிவாதியின் பிறப்பு சான்றிதழ் | /நகல்/ |
| வா.சா.ஆ.4 | - | தாவா சொத்திற்காக கணேசன் பெயரிலுள்ள பட்டா மற்றும் 'அ' பதிவேடு | / நகல்/ |
| வா.சா.ஆ.5 | - | ஈரோடு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் C.C.1151/2019 – வழக்கு | /அலுவலக நகல்/ |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிப்பட்டியல்:</u> இல்லை

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணப்பட்டியல்:</u> இல்லை

N PANNEERSELVAM
Digitally signed by N PANNEERSELVAM
Date: 2024.02.26 18:45:25 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.